**2024**
**ஒக்தோபர்**

# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்
## தயாரித்தல் மற்றும் பணிகள்

STATISTICS DEPARTMENT
CENTRAL BANK OF SRI LANKA


**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள், 2024 ஒக்தோபரில் தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் ஆகிய இரண்டிலும் விரிவடைதல்களை எடுத்துக்காட்டுகின்றன**

**தயாரிப்பிற்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – தயாரிப்பு), 2024 ஒக்தோபரில் 58.1 ஆக அதிகரித்து, தயாரிப்பு நடவடிக்கைகளில் மேலும் விரிவடைதலை எடுத்துக்காட்டியது.** இம்மேம்பாடானது அனைத்துத் துணைச் சுட்டெண்களிலிருந்தும் கிடைத்த சாதகமான பங்களிப்புகளுடன் பருவ காலக் கேள்வியினால் பிரதானமாகத் தூண்டப்பட்டிருந்தது.

வரவிருக்கும் பண்டிகைப் பருவகாலத்திற்காக, பிரதானமாக உணவு மற்றும் குடிபான துறைக்கான உற்பத்திக் கட்டளைகள் நிறுவனங்களுக்குத் தொடர்ச்சியாகக் கிடைக்கப்பெற்றதனால் புதிய கட்டளைகள் துணைச் சுட்டெண் ஒக்தோபரில் உயர்வடைந்து காணப்பட்டது. மேலும் நிறுவனங்கள் தமது உற்பத்திச் செயன்முறைகளை துரிதப்படுத்திருந்தமை மாத காலப்பகுதியில் உற்பத்தித் துணைச் சுட்டெண்ணை அதிகரித்தது. மேலும், புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி என்பவற்றில் விரிவடைதலுடன் அணிசேர்ந்து தொழில்நிலை மற்றும் கொள்வனவுகளின் இருப்புத் துணைச் சுட்டெண்கள் மாதத்திற்கு மாதம் அதிகரிப்புக்களைக் காண்பித்தன. அதேவேளை, நிரம்பலர் விநியோக நேரம் மாத காலப்பகுதியில் நீட்சியடைந்து காணப்பட்டது.

**தயாரிப்பு கொ.மு.சு 58.1**
**2024 ஒக்தோபர்**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

*கொமுசு தொகுப்பு - தயாரித்தல் அளவீடு*

| மாறி | செத். | ஒத். | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு – தயாரித்தல்** | **54.1** | **58.1** | **-** | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| புதிய கட்டளைகள் | 57.5 | 58.5 | - | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| உற்பத்தி | 53.0 | 62.6 | - | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 47.0 | 52.0 | - | வீழ்ச்சியிலிந்து அதிகரிக்கின்றது |
| கொள்வனவுகளின் இருப்பு | 57.0 | 62.5 | - | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 56.7 | 55.1 | - | நீட்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

வரவிருக்கும் பருவகாலத்துடன் இணைந்த சாதகமான எண்ணப்பாங்கின் மூலம் பெருமளவில் துணையளிக்கப்பட்டு அடுத்து வருகின்ற மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கை சாதகமாகக் காணப்படுகின்றது.

### உலகளாவிய தோற்றப்பாடு:

கொமுசு தயாரித்தல் தொகுப்பு

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| இந்தியா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| சீனா | வீழ்ச்சியிலிந்து அதிகரிக்கின்றது |
| ஐக்கிய அமெரிக்கா | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |
| யூரோ வலயம் | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2024 செத்தெம்பர் 18 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

[1]எஸ் அன்ட் பி குளோபல், உலகம் முழுவதும் 40 இற்கு மேற்பட்ட நாடுகளுக்கு கொமு சுட்டெண்களைத் தொகுக்கின்றது.

**பணிகளுக்கான இலங்கைக் கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு – பணிகள்), 60.3 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்த வியாபார நடவடிக்கைச் சுட்டெண் மூலம் பிரதிபலிக்கப்பட்டவாறு 2024 ஒத்தோபரில் பணிகள் நடவடிக்கைகளில் மேலும் விரிவடைதலை எடுத்துக்காட்டியது.**

அநேகமான முக்கிய துறைகளுக்கிடையில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகள் மூலம் வியாபார நடவடிக்கைகளில் விரிவடைதல் தூண்டப்பட்டிருந்தது. அதற்கமைய, மேம்பட்ட கடன்வழங்கல் நடவடிக்கைகளைத் தூண்டிய ஏற்கனவே காணப்படுகின்ற சாதகமான வட்டி வீதங்களால் முதன்மையாகத் தூண்டப்பட்டு நிதியியல் பணிகளிலுள்ள வியாபார நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்க மேம்பாட்டினை அனுபவித்தன. மேலும், கல்வி, மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம், உண்மைச் சொத்து மற்றும் காப்புறுதி என்பவற்றின் வியாபார நடவடிக்கைகளும் குறிப்பிடத்தக்க மேம்பாடுகளைப் பதிவுசெய்தன. எனினும், முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் தகவல் தொழில்நுட்ப செய்நிரலாக்கம், நிகழ்ச்சித் தயாரிப்பு மற்றும் ஒலிபரப்பு என்பவற்றின் வியாபார நடவடிக்கைகள் மாத மாதகாலப்பகுதியில் வீழ்ச்சியடைந்த அதேவேளை, தங்குமிடம் மற்றும் தொலைதொடர்பு என்பன மாற்றமின்றிக் காணப்பட்டன.

விசேடமாக நிதியியல் பணிகள் நடவடிக்கைகளில் கணிசமான விரிவடைதல் காரணமாக ஒத்தோபரில் புதிய வியாபாரங்கள் அதிகரித்தன.

அதேவேளை, தொழில்நிலையும் நிலுவையிலுள்ள பணிகளும் மாதத்திற்கு மாதம் அடிப்படையில் ஒத்தோபரில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன.

*கொமுசு தொகுப்பு - பணிகள் அளவீடு*

| மாறி | செத். | ஒத். | +/- | போக்கு |
|---|---|---|---|---|
| **கொமுசு – பணிகள் (வியாபார நடவடிக்கைச் சுட்டெண்)** | **53.4** | **60.3** | - | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| புதிய வியாபாரங்கள் | 53.5 | 58.8 | - | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 48.5 | 47.9 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 48.5 | 48.9 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 72.4 | 77.6 | - | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

அடுத்த மூன்று மாதங்களுக்கான வியாபார நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் சாதகமான பேரண்டப் பொருளாதார நிலைமைகள் மூலம் ஆதரவளிக்கப்பட்டு, உயர்வான வீதத்தில் தொடர்ந்தும் மேம்பட்டன.

**பணிகள்**

**கொ.மு.சு 60.3**

**2024 ஒத்தோபர்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

**உலகளாவிய தோற்றப்பாடு: கொமுசு பணிகளின் தொகுப்பு**

| நாடு/அதிகார எல்லை | போக்கு |
|---|---|
| உலகம் | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| இந்தியா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| சீனா | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| ஐக்கிய அமெரிக்கா | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| ஐக்கிய இராச்சியம் | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| யூரோ வலயம் | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[i], 2024 நவெம்பர் 18 அன்று உள்ளவாறு (கொமுசு வெளியீடுகள் (spglobal.com))*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**முறையியல்**

வினாக்கொத்துக்கள் தொடர்ந்துவருகின்ற மாதத்தின் முதலரையில் நிறைவுசெய்யப்படுகின்றன. ஒவ்வொரு மாறிலிக்காகவும் முன்னைய மாதத்துடன் ஒப்பிட்டு அதிகரிப்பை, வீழ்ச்சியை அல்லது மாற்றமின்மையை அறிக்கையிடுமாறும் ஏதேனும் மாற்றங்களுக்கான காரணங்களை வழங்குமாறும் பதிலிறுப்பாளர்கள் கேட்கப்படுகின்றனர். சுட்டெண் தொகுப்பும் சுட்டிகள் பற்றிய பொருள்கோடலும் எஸ் அன்ட் பி. குளோபல் அளவீட்டு முறையியலைப் பின்பற்றுகின்றன.

**கொமுசு – தயாரித்தல்,** தயாரித்தலுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகக் கருதப்படுகின்ற இது புதிய கட்டளைகள், வெளியீடு, தொழில்நிலை, நிரம்பலர் விநியோக நேரம் மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பவற்றின் நிறையேற்றப்பட்ட சராசரியொன்றாகும்.

பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண் என்பது, பன்னாட்டு ரீதியான சிறந்த நடத்தைகளுக்கமைவாக பணிகளுக்கான முதன்மைச் சுட்டெண்ணாகும். இது, **கொமுசு – பணிகள்** எனக் குறிப்பீடு செய்யப்படுகின்றது. பணிகள் வியாபார நடவடிக்கைச் சுட்டெண்ணானது தயாரித்தல் உற்பத்திச் சுட்டெண்ணுடன் ஒப்பிடத்தக்கதாகும்.

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

| | |
|---|---|
| கொ.மு.சு=50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது. |
| கொ.மு.சு >50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது. |
| கொ.மு.சு <50 | மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது. |

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | பூர்த்திசெய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.